MAY 2022 **U/ID 32417/UCX3A**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. What is financial management?

   நிதியியல் மேலாண்மை என்றால் என்ன?

2. Mention any two objectives of financial management.

   நிதியியல் மேலாண்மையின் நோக்கங்கள் ஏதேனும் இரண்டினைக் குறிப்பிடுக.

3. Define Equity proportion.

   சமபங்கு விகிதம் - வரையறு.

4. Define financial leverage.

   நிதி கருவியாற்றல் வரையறு.

5. State the components of cost of capital.

   மூலதன அடக்கத்தின் கூறுகளை கூறுக.

6. Mention the different types of leverages.

   பல்வேறு வகையான ஆற்றலாதாயங்களை குறிப்பிடுக.

7. What do you mean by dividend?

   பங்காதாயம் என்றால் என்ன?

8. What is stock dividend?

   சரக்கு பங்காதாயம் என்றால் என்ன?

9. List out the different types of dividend.

   பங்காதாயத்தின் பல்வேறு வகைகளை வரிசைப்படுத்துக.

10. What are the principles of working capital management?

நடைமுறை மூலதன மேலாண்மையின் அடிப்படைக் கூறுகள் யாவை?

11. What do you mean by retained earnings?

வைத்திருக்கும் வருமானம் என்றால் என்ன?

12. What is meant by permanent working capital?

நிரந்தர நடைமுறை மூலதனம் என்றால் என்ன?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. Explain the importance of financial management.

நிதி மேலாண்மையின் முக்கியத்துவத்தை விவரி.

14. Explain the factors affecting capital structure.

மூலதன அமைப்பை பாதிக்கும் காரணிகளை விவரி.

15. A company has 10% redeemable preference shares of Rs. 1,00,000 redeemable at the end of the 10th year from the year of their issue.

The underwriting costs came to 2%

Calculate the cost of preference share capital.

ஒரு கம்பெனியானது ரூ. 1,00,000க்கு 10% மீட்கக் கூடிய முன்னுரிமைப் பங்குகளை வெளியிட்டதிலிருந்து 10 வருடத்துக்குள் மீட்க கூடியதாய் வைத்து உள்ளது. ஏஜென்சி செலவுகள் 2% முன்னுரிமை பங்கு மூலதன அடக்கத்தை கணக்கிடவும்.

16. Compute the operating, financial and combined leverages from the given data.

Sales 50,000 units at Rs. 12 per unit

Variable cost at Rs. 8 per unit

Fixed cost Rs. 90,000 (including 10% interest on Rs. 2,50,000).

பின்வரும் விவரங்களிலிருந்து செயலாக்கம், நிதி மற்றும் கூட்டு ஆற்றலாதாயங்களை கணக்கிடுக.

விற்பனை – 50,000 அலகுகள் ரூ. 12 ஓர் அலகிற்கு

மாறுபடும் செலவுகள் – ஓர் அலகிற்கு ரூ. 8

நிலையான செலவுகள் – ரூ. 90,000 (ரூ. 2,50,000-க்கு 10% வட்டி உள்ளடக்கியது)

17. What are the problems in determining cost of capital?

மூலதன கிரயத்தை தீர்மானிப்பதில் உள்ள பிரச்சனைகள் யாவை?

18. Explain the components of working capital.

பணி மூலதனத்தின் கூறுகளை விளக்குக.

19. Rose Ltd. is engaged in customer retailing. You are required to estimate its working capital requirement from the following data.

Projected annual sales	Rs. 9,00,000
Percentage of net profit to cost of sales	20%
Average credit allowed by debtors	1 month
Average credit allowed by creditors	2 months
Average stock carrying (interms of sales requirements)	2 ½ months

Add 10% to allow for contingencies.

ரோஸ் நிறுமம் நுகர்வோர் விற்பனையில் ஈடுபட்டுள்ளளது. பின்வரும் விவரங்களிலிருந்து நடைமுறை மூலதனம் கணக்கிடுக.

எதிர்பார்க்கும் ஆண்டு விற்பனை	ரூ. 9,00,000
அடக்க விற்பனையின் மீது இலாபம்	20%
கடனாளிகளுக்கு வழங்கும் காலம்	1 மாதம்
கடனீந்தோர் வழங்கும் காலம்	2 மாதங்கள்
சராசரி சரக்கு கையிருப்பு (விற்பனை மீது)	2 1/2 மாதங்கள்

எதிர்பாராத மாற்றங்களுக்காக 10% கூட்டுக.

PART C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

20. "The most important case of business failure in the faulty financial planning" - Discuss.

வியாபாரத் தோல்விக்கு மிக முக்கிய காரணம் தவறான நிதித்திட்டமிடலே விவாதிக்க.

21. Calculate financial leverage and operating leverage under situations A and B and financial plan I and II respectively from the following information relating to the operation and capital structure of ABC Ltd.

Installed capacity 1000 units

Actual production and sales 800 units

Selling price per unit Rs. 20

Variable cost per unit Rs. 15

Fixed cost :

Situation A Rs. 800

Situation B Rs. 1,500

Capital structure	Financial Plan	
	I (Rs.)	II (Rs.)
Equity capital	5,000	7,000
Debt at 10%	5,000	2,000

ABC நிறுமத்திலிருந்து கிடைக்கும் கீழ்காணும் செயல்பாடு மற்றும் மூலதன அமைப்பு முறையிலிருந்து சூழ்நிலை A மற்றும் சூழ்நிலை Bல் நிதித்திட்டம் I மற்றும் நிதித்திட்டம் IIக்கு செயல் ஆற்றலாதாயம் மற்றும் நிதி ஆற்றலாதாயங்களைக் காண்க.

நிறுவப்பட்ட திறன் அளவு 1000 அலகுகள்

உண்மையில் உற்பத்தி மற்றும் விற்பனை 800 அலகுகள்

விற்பனை விலை அலகுகள் ரூ. 20

மாறும் செலவுகள் அலகு ஒன்றுக்கு ரூ. 15

நிலையான செலவுகள் :

சூழ்நிலை A ரூ. 800

சூழ்நிலை B ரூ. 1,500

மூலதன அமைப்பு :	நிதித்திட்டம்	
	I ரூ.	II ரூ.
நேர்மைப் பங்குமுதல்	5,000	7,000
கடன்10%த்தில்	5,000	2,000

22. The following is the capital structure of Moris Ltd.

Source	Amount Rs.	Market value Rs.	C/C
14% preference capital	2,00,000	2,30,000	14%
Equity capital	5,00,000	7,50,000	17%
16% debt	3,00,000	2,70,000	8%
Total	10,00,000	12,50,000	

Calculate the weighted average cost of capital, using book value weights and market value weights.

மோரிஸ் நிறுமத்தின் மூலதன கட்டமைப்பு பின்வருமாறு :

மூலங்கள்	தொகை ரூ.	சந்தை மதிப்பு ரூ.	கிரயம்
14% முன்னுரிமை பங்குகள்	2,00,000	2,30,000	14%
சம பங்குகள்	5,00,000	7,50,000	17%
16% கடனீட்டுப் பத்திரம்	3,00,000	2,70,000	8%
மொத்தம்	10,00,000	12,50,000	

எடையிடப்பட்ட சராசரி மூலதன அடக்கத்தை புத்தக மதிப்பிலும் மற்றும் சந்தை மதிப்பிலும் கணக்கிடுக.

23. Discuss the merits and limitations of Walter's dividend model.

வால்டர்ஸ் டிவிடெண்ட் மாதிரியின் சிறப்புகள் மற்றும் வரம்புகள் பற்றி விவாதிக்கவும்.

24. What are the factors that determine the working capital requirement of a firm?

நடைமுறை மூலதனத்தை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

———————